Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 352

வெள்ளிக்கிழமை
14 நவம்பர் 2025

ஐப்பசி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



# பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம்; அமைச்சர் ஹர்ஷனவிடம் அறிக்கை

**கொழும்பு, நவம்பர் 14**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பான பரிந்துரை அறிக்கை, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.** 11

## யாழ்.நகரில் இன்று நீரிழிவு நடைபவனி

யாழ்ப்பாணம், நவ. 14
உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 11

## துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுக

### கோடீஸ்வரன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, நவ. 14
தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தை உடன் வெளியேற்றுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று 11

## வங்காள விரிகுடாவில் உருவாகின்றது புயல்!

### வடக்கு மாகாணத்தில் மழை கொட்டித் தீர்க்கும்

யாழ்ப்பாணம், நவ. 14
வங்காள விரிகுடாவில் தற்போது காணப்படும் காற்றமுத்த நிலைமைகள் காரணமாக மழை தொடரும் என்றும், எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் புயலுக்குச் சாத்தியம் காணப்படுகின்றது எனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் 11



## மன்னாரில் சிறுமி துஷ்பிரயோகம் குற்றவாளிக்கு கடூழியம்

விரிவு பக்:-03

## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தொல்.திருமாவளவன் அஞ்சலி

முல்லைத்தீவு, நவ. 14
தமிழகத்தின் முக்கியமான அரசியற் தலைவர்களில் ஒருவரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல்.திருமாவளவன் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளார்.
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற 'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சி நல்லூர் கிட்டு பூங்காவில் இன்று பிற்பகல் 3 11

## ஹெரோய்னுடன் இருவர் கைது!

### சாவகச்சேரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 14
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழிப் பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இரண்டு இளைஞர்கள் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய போதைப்பொருள் மற்றும் குற்றத் தடுப்பு 11





## தேர்தல் ஆணையாளர் பணியில் இருந்து ஓய்வு



கொழும்பு, நவ. 14
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க பணியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
சமன் ஸ்ரீ ரத்நாயக்க, 2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந் 11

## போதைமாத்திரைகளுடன் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 14
கொக்குவில் - கலட்டிப் பகுதியில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி 11

## இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க கண்காணிப்புத் தீவிரம்

விரிவு பக்கம்:-02

## நிலையான மாற்றத்துக்காக இறுதிவரை போராடுவோம்!

### ஜனாதிபதி அநுர உறுதி



கொழும்பு, நவ. 14
மக்களுடன் மக்களாகச் செயற்படும் அரசாங்கமே தற்போது ஆட்சியில் உள்ளது. இந்த அரசாங்கம் ஒருபோதும் விழாது. அது மேலும் உறுதியாகக் கட்டியெழுப்பப்படும். நிலையான மாற்றத்தை ஏற்படுத்தும் வரை இந்தப் போராட்டம் தொடரும் இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
மக்கள் விடுதலை முன்னணியின் 'கார்த்திகை வீரர்கள்' நினைவுதினம் கொழும்பு விஹார மஹா தேவி பூங்கா 11

### முச்சந்தி முரளி

'பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை எண்ட கணக்கில தான் நாட்டில எல்லாம் நடந்து கொண்டிருக்குது கண்டியளோ'

## கிணற்றுக்குள் இருந்து இளைஞர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 14
யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள தோட்டக் கிணற்றுக்குள் இருந்து இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நிரோஷன் நிரக்சன் (வயது- 18) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக 11

மக்கள் ம[illegible]ழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4254 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 05 26 47 60 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1321 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 32 35 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0280 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 8 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2360 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கங்கள் | 01 47 48 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6012 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 9 8 8 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2042 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 09 32 61 76 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0128 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 24 39 48 |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 13.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0587 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 9 8 8 5 |

# அரசியல் மாபியாக்களின் பிடியிலிருந்து யாழ்ப்பாணத்தை விடுவிக்கவேண்டும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ.14**

**நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தும்வகையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கையர் தினம் நிகழ்வு நடைபெறுகின்றது. இதன்மூலம் இன ஒற்றுமை, மத ஒற்றுமை மேம்படுத்தப்பட்டு சமத்துவம் கட்டியெழுப்பப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை, அரசியல் மாபியாக்களிடமிருந்து விடுபட்ட யாழ்ப்பாணத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கார்த்திகை மாதமென்பது முக்கியமான மாதம். மாவீரர்களை நினைவு கூருகின்ற மாதம். அது மட்டுமல்ல வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள் தமது பிள்ளைகளை நினைவுகூருகின்ற மாதமாகும். அந்த மாதத்தில் இருந்துகொண்டு நாம் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. தமிழ் மக்களுக்கு எதையாவது செய்யவேண்டும் என்ற நோக்கில் போராடிய இளைஞர்கள் எதிர்பார்த்தது என்ன? அவர்களின் அபிலாசைகள் என்ன என்பதைப்புரிந்துகொள்ளவேண்டும். தமது மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்பட அவர்கள் போராடி இருந்தால், அந்தக் கனவை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாட்டை எந்தவொரு தமிழ்க் கட்சியாவது, அரசியல்வாதியானது முன்னெடுக்கின்றனரா? இல்லை. அது கேள்விக்குறியாகவே உள்ளது.

வடக்கு மாகாணத்தில் மக்கள் தொகை குறைவடைந்துவருகின்றது. வறுமையும் இங்குதான் அதிகரித்துவருகின்றது. கடந்த கால ஆட்சியாளர்கள் இப்பகுதி பற்றி அவதானம் செலுத்தவில்லை. தமது மடியை நிறைத்துக் கொள்ளும்வகையிலான அரசியலே முன்னெடுக்கப்பட்டுள்ளது. கல்வியில் யாழ்ப்பாணம் சிறந்து விளங்கியது. எனினும், கடந்த காலங்களில் அது வீழ்ச்சியடைந்துவருகின்றது.

கடந்த 7 மாதங்களாக புது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

போதைப்பொருள் மாபியாக்கள் வடக்கை அச்சம் கொள்ள வைத்துள்ளன. போதைப்பொருளுக்குப் பின்னால் இராணுவம் உள்ளது எனக்குற்றஞ்சாட்டினீர்கள். அதில் உண்மை உள்ளது. அந்த மாபியாக்களுடன் தமிழ் அரசியல் வாதிகளும் பிணைந்துள்ளனர். அவ்வாறானவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர். ஒட்டுமொத்த இராணுவம், பொலிஸ் மீது குறைகூற முடியாது. ஒரு சிலரின் செயற்பாடு தொடர்பில் பிழை உள்ளது. மாபியாக்களின் பின்னால் அரசியல்வாதிகள் உள்ளனர் என்பதை மறந்துவிடக்கூடாது-என்றார். (எ-44,26)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 13.11.2025 | வியாழக்கிழமை | 0720 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| B | 2 4 2 8 0 9 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.11.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2986 | P | 07 09 27 35 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.11.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| D | 38 46 56 79 | 5147 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.11.2025 | வியாழக்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0816 | 07 10 43 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.11.2025 | வியாழக்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 39 43 52 61 | 4698 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 13.11.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 12 | 21 25 43 52 | 2162 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 13.11.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 13 28 46 65 | 2812 |

# ஐ.எம்.எப். திட்டங்கள் ஊடாக நெருக்கடி ஏற்படுத்தும் அரசு

## திலித் ஜயவீர குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.14

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டங்களைச் செயற்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு அரசாங்கம் நாட்டை பொருளாதார ரீதியில் மேன்மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது. 2028ஆம் ஆண்டுக்கு பின்னர் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வித திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை என்று சர்வஜன சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புமீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பேரண்ட பொருளாதாரம் நாட்டு மக்களுக்கு பயனுடையதாக அமையும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். சமூகக் கட்டமைப்பில் ஏழ்மை 3 சதவீதமாகவும், தொழிலின்மை 2 சதவீதமாகவும் உயர்வடைந்துள்ளது. ஆனால் நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையவில்லை. சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை.

சர்வதேச நாணயநிதியம் விதிக்கும் சகல நிபந்தனைகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மேற்குலக நாடுகள் மத்தியில் அரசாங்கம் தலைகுனிந்து செயற்படுகிறது. அதனால் இலங்கை தனது தேசிய கௌரவத்தை இழந்துள்ளது - என்றார். (எ-இ)

# பட்ஜெட்டை எதிர்ப்பதற்கு ஐ.ம.சக்தி தீர்மானம்!



கொழும்பு, நவ.14

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க ஐக்கிய மக்கள் சக்தி ஒருமனதாகத் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# படகில் தமிழகம் சென்றவர் அரிச்சல்முனையில் கைது!

மன்னார், நவ.14

சட்டவிரோதமான முறையில் மன்னாரில் இருந்து படகு மூலம் தமிழகத்தின் தனுஷ்கோடி அரிச்சல்முனைக்குச் சென்ற ஒருவர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனுஷ்கோடி அரிச்சல்முனைக் கடற்கரைப் பகுதியில் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அவர் சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக இலங்கையிலிருந்து தப்பி தனுஷ்கோடி வந்து இறங்கியது தெரியவந்ததையடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் மன்னார் வங்காலையைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. (எ-இ)

# இந்திய மீனவர்கள் அத்துமீறலை தடுப்பதற்கு நடவடிக்கை தீவிரம்

## பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சால் அனைத்துவித தலையீடுகளும் மேற்கொள்ளப்படும் என்று பிரதி அமைச்சர் ரத்னகமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரனால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராஜதந்திர மட்டத்திலான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தற்போது அத்துமீறினால் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளது. இதை மீனவர்களும் கூறுகின்றனர். அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தலையீடுகளை அமைச்சு மேற்கொள்ளும்- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றைக் கட்டிக் காப்பதற்கு ஆவணக் காப்பகம் அவசியம்!

சட்டத்தரணி குருபரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,நவ.14**

**சட்டத்தை மட்டும் வைத்து ஒரு சமூகத்தை மாற்றமுடியாது. ஒரு சமூகத்தின் வரலாற்றை எடுத்துக்காட்டுவதற்கு ஆவணக் காப்பகம் முக்கியமானது என சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார்.**

யாழில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அரசியல் தீர்வும் பொறப்புக்கூறலும் ஒரு எண்ணிம ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூகத்தின் தேவைகளை - நோக்கங்களை நிறைவேற்ற சட்டத்தை மட்டும் பயன்படுத்த முடியாது. ஒரு சமூகத்தின் கடந்த கால வரலாற்றுச் சம்பவங்களை அறிய அவர்களின் ஆவணங்களைப் பாதுகாப்பது அவசியம்.

ஆவணக் காப்பகம் என்பது குறிப்பாக தமிழ் மக்களின் கடந்தகால வரலாறுகளை அறிவதற்கும் எதிர்வரும் காலங்களில் அதன் ஊடாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் ஆராய்வதற்குப் பயன்படும்.

எங்களுடைய முயற்சிகளை நாங்களே பூர்த்திசெய்ய வேண்டும் என்ற சிறு முயற்சியின் காரணமாக யாழ்ப்பாண நூலகத்துடன் இணைந்து ஆவணக் காப்பகம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

இந்த சிறிய தேடல் எமது வரலாற்றில் பின்னோக்கி இடம்பெற்ற அரசியல் ரீதியான கடிதத் தலைப்புகள் ,கடிதப் பரிமாற்றங்கள் உடன்படிக்கைகள் என்பவற்றைத் தேடி இந்த ஆவணக் காப்பகத்தில் பதிவிட்டுள்ளோம்.

பல விடயங்கள் தேடவேண்டி உள்ளமையால் உங்களிடம் கிடைக்கப்பெற்ற - ஆவணப் படுத்தப்படவேண்டும் என கருதப்படும் - விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

ஆகவேபுதிய அரசியலமைப்பு வர இருக்கின்றது எனக் கூறப் படுகின்ற நிலையில் எமது ஆவணக் காப்பகத்தின் மூலம் புதிய அரசியலமைப்புக்குத் தேவையான விடயங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்- என்றார். (ச-27)

மன்னாரில்

## சிறுமி துஷ்பிரயோகம்; குற்றவாளிக்கு கடூழியம்

மன்னார், நவ.14

மன்னார், அடம்பன் பிரதேசத்தில் 8 வயது சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், குற்றவாளியாக இனங்காணப்பட்டவருக்கு 8 வருட கால கடூழியச் சிறைத் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் குற்றம் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்றுள்ளது. வழக்கின் நீண்ட விசாரணைகளின் பின்னர், எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். மிஹால் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றவாளிக்கு 8 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நஷ்டஈடாக 2 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் குற்றவாளிக்குக் கட்டளையிட்டார். (ச-56)

## இலக்கை எட்டியது சுங்கம்

கொழும்பு, நவ.14

இலங்கை சுங்கத்தினால் இந்த ஆண்டுக்குள் ஈட்டவேண்டிய வருவாய் கடந்த செவ்வாய்க்கிழமை இலக்கைக் கடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வருவாய் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 2,115 பில்லியன் ரூபாவுக்கு அதிகமாக 2,117.2 பில்லியன் ரூபா எல்லையை எட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



வடக்கில்

## தொழில்நுட்பவியல் சேவை 43 பேருக்கு நியமனங்கள்

யாழ்ப்பாணம்,நவ.14

இலங்கைப் பொறியியல்சேவை மற்றும் இணைந்த சேவையின் தொழில்நுட்பவியல் சேவை பதவிக்கான நியமனம் வழங்கல் நிகழ்வு கைதடியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது 4 பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 39 பேருக்கு நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மாகாணசபை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-113)




## இன்னுமொரு மாபியா-2

**லீலையள் செய்யிறதில பேர்போன கடவுளின் பேரை வைச்சிருக்கிறதாலையோ என்னவோ அந்த யூரியூப்பரும் ஒரே லீலைகளின் மன்னன் தான். அவருக்கு தான் பெரிய கிரந்தம் விடுற ஆள் எண்ட நினைப்பு. பக்கத்தில நிக்கிறதுகள், உந்த யூரியூப்பர் சொல்லுற எல்லாத்துக்கும் விழுந்து விழுந்து சிரிக்கிறதால, தான் சொல்லுறதெல்லாம் கடும் பகிடி எண்ட கனவில மிதக்கிற ஆள். அப்பிடிப்பட்ட உந்தக் கிரந்த யூரியூப்பர் கொஞ்சக்காலத்துக்கு முதல் பண்டத்தரிப்பில ஒரு வீட்டுக்கு உதவி செய்யப்போறனெண்டு போய், அங்க இருந்த படிக்கிற பிள்ளையைக் கேவலமாக் கதைச்சு, அதையும் பெரும் பகிடி எண்டு யூரியூப்பில போட, அந்தப் பிரச்சினை பத்தியெரிஞ்சு, பிறகு ஆளை ஜெயிலுக்கையும் போட்டவை. அதுக்குப் பிறகும் ஆளுக்குச் சுரணை வரேலை? எப்பிடி வரும்.அதுதான் உசுப்பேத்த வெளிநாட்டு அன்ரியள் இருக்கினமே. இந்தக் கிரந்த யூரியூப்பருக்கும், ஊசிக்கார டாக்குத்தருக்கும் வெளிநாட்டு அன்ரிமார் இருக்கும் வரைக்கும் சுக்கிரதிசைதான். இவையள் செய்யிற எல்லாக் கூத்துகளையும் பெரிய சாதனை மாதிரி அவையள் கொண்டாடி, காசையும் அள்ளி அனுப்புவினம்.**

**அன்ரிமார் தந்த அமோகமான ஆறுதல் ஒத்தடத்தால, சிறைக்குப் போனதையெல்லாம் சிம்பிளா எடுத்துக்கொண்டு கிரந்த யூரியூப்பர் பழையபடி களத்தில இறங்கிட்டார். இப்ப ஆள் முந்தினதை விடவும் இன்னும் மோசமான கதையள், செய்கையளில இறங்கிட்டார். கிட்டடியில ஒரு வீடியோ விட்டிருந்தார். கஷ்டப்பட்ட பொம்பிளைப்பிள்ளை ஒண்டின்ர பிறந்தநாளுக்காக வெளிநாட்டில இருக்கிறவை நல்ல உடுப்பு வாங்கிக் குடுக்கச்சொல்லி காசு குடுத்திருக்கினம். அப்பிடிக் காசு வந்தால், அதை அந்தக் குடும்பத்திட்ட கொண்டு போய்க்குடுத்திட்டு அதை வீடியோ போட்டால் ஓகே. ஆனால் அப்பிடிப்போட்டால் பெரிசா ஆக்கள் பாக்காயினம். கூடப்பேர் பார்த்தால் தானே காசும்கூட வரும். அதால கிரந்த யூரியூப்பர் அந்தப் பிள்ளையளையும், குடும்பத்தையும் புடவைக்கடைக்கே கூட்டிக்கொண்டு போய் உடுப்பெடுத்துக் குடுத்திருக்கிறார். பிறந்தநாள் கொண்டாடுற பிள்ளைக்கும், அதின்ர தங்கச்சியையும், தாயையும் கடையில வைச்சு வீடியோவில எல்லாருக்கும் "இவைக்குத்தான் உடுப்பெடுக்கவும் வழியில்லை" எண்டதைக் காட்டி, அவையின்ர குடும்பத்தின்ர மானத்தைக் கப்பலேத்தியிருக்கிறார். அந்தப் பிள்ளைகள் ரண்டும் நாளைக்குப் பள்ளிக்கூடம் போனால்,மற்றப்பிள்ளையள் "உனக்கு உடுப்பு வாங்கவே காசில்லையோ.? வேற ஆக்களோ உடுப்பு வாங்கித்தாறவை?" எண்டு கேட்டால், அதுகளின்ர மனம் என்ன பாடுபடும்?**

**அந்தப் பொம்பிளைப் பிள்ளையளின்ர முகத்தைக் காட்டித்தான் உந்தக் கிரந்த யூரியூப்காரர் தன்ர வயித்தைக் கழுவவேணுமோ? சரி, உதவிசெய்யிறதெண்டால் அவையின்ர முகத்தைக் காட்டாமல் செய்தால் குறைஞ்சோ போடுவியள்? அதோட ஒரு சோடி உடுப்பெடுத்துக்குடுக்கிறதுக்குள்ள ஆயிரத்தெட்டு வக்கிரக் கதையள். அந்தப் பொம்பிளைப் பிள்ளையளும் "எடி உனக்கு இந்த உடுப்பைப் போட்டால் சிம்ரன் மாதிரி இருக்கு" "இந்தக் கலரில நீ பச்சைக் கிளிமாதிரி இருக்கிறாயடி" " உடம்பு வைக்கத்தான் இன்னும் வடிவா வருவாய், "நீ கறுப்பெண்டால் கண்டோஸ் தான்" எண்டு வக்கிரமா , அந்தக் கிரந்த யூரியூப்பர் வர்ணிக்கிறதையெல்லாம் சகிச்சுக்கொண்டுதான் உடுப்பை வாங்கிக்கொண்டு போகுதுகள். என்ன செய்ய? ஏழையளாப் பிறந்ததால இதுகளையெல்லாம் அதுகள் சந்திக்கவேண்டியிருக்கு. ஆனால் உதையெல்லாம் பார்த்து ரசிக்கிறதுக்கும், உப்பிடியான குறளி வித்தையளைப் பார்த்தபிறகும் காசு அனுப்பிறதுக்கும் ஆக்களும், அன்ரிமாரும் இருக்கும் வரை உந்த யூரியூப் மாபியாக்களின்ர காட்டில காசுமழைக்குக் குறையில்லை கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத்துணையால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள்வகையில் சுபச்செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் – மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது. நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** மனதில் அவ்வப்போது சஞ்சலம் ஏற்படும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். தாய்மாமன்வழியில் சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது.

**துலாம்:** இன்று நீங்கள் தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதரவகையில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.


**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். தாய்மாமன்வழியில் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தைவழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சகோதரவகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.



# கொழும்பு – முல்லைத்தீவு சொகுசு பஸ் சேவை ஆரம்பம்

முல்லைத்தீவு,நவ.14

கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக்கு குளிரூட்டப்பட்ட சொகுசுப் பேருந்துச் சேவை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவுக்கும் இரவு 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்புக்கும் குளிரூட்டப்பட்ட பேருந்துச் சேவை இடம்பெறுகின்றது. (க-246)

# வீடுகளுக்குள் புகும் கடல்நீர்; மன்னார் மக்கள் அந்தரிப்பு

மன்னார்,நவ.14

மன்னார் நகரப்பகுதி வீடுகளுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

மன்னார் உப்புக்குளம், சௌத்பார், பள்ளிமுனை, கோந்தைப்பிட்டி உள்ளிட்ட 13 கிராமங்கள் இந்தப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இதன் காரணமாக கைக்குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர்கள் உள்ள குடும்பத்தினர் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-213)

## கிளிநொச்சியில்

# காணி எல்லைகள் அடையாளம் டிஜிற்றல் மயப்படுத்த நடவடிக்கை

கிளிநொச்சி, நவ.14

10 மில்லியன் காணித்துண்டுகளின் எல்லைகளை அடையாளப்படுத்தி தகவல் சேகரிக்கும் டிஜிற்றல் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

காணி தொடர்பான தகவல்களை நில அளவைத் திணைக்களத்தின் காணி தகவல் முறைமைத் தரவுத்தளத்தில் ஒருங்கிணைக்கும்முகமாக இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

இதனூடாக காணிகளை இலகுவாக அடையாளம் காணமுடியும். அதுமட்டுமன்றி காணி சார்ந்த பிரச்சினைகளுக்கு செலவிடும் நேரத்தைச் சிக்கனப்படுத்துவதுடன் அதனை இலகுவாகக் கையாளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நிர்வாகக் கிராம அலுவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், வெளிக்களப் போதனாசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)



# யாழ் . நூலகத்துக்கு நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14

கோட்டை ஸ்ரீகல்யாணி சாமக்ஸ்ரீ தர்மமகா சங்க சபையின் 170ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர்.எஸ்.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன், யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஸ்ணேந்திரன், யாழ்ப்பாணப் பொது நூலகப் பிரதம நூலகர் திருமதி சிவகரன் அனுசியா மற்றும் கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமக்ரீ தர்மமகா சங்க சபையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-66)



# நாதஸ்வரக் கச்சேரி

யாழ்ப்பாணம், நவ.14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக நாதமணி மதுசூதனனின் 'வேல்நாதம்' நாதஸ்வரக் கச்சேரி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் அணிசெய் கலைஞர்களுடன் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

## உண்மையை ஏன் மறைக்கிறார்கள்?

தமிழர் தாயகத்தில் போருக்குப் பின்னர் அள்ளிவழங்கப்பட்ட நுண்நிதிக் கடன்கள் பலரின் வாழ்க்கையைத் தடமாற்றியிருக்கும் நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நுண்நிதிக் கடன்களால் உயிரிழப்புகள் ஏற்பட்டமைக்கான எந்த ஆதாரங்களும் இல்லை' என்று சர்வசாதாரணமாகக் கூறிக் கடந்திருக்கின்றார் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த. பிரதி அமைச்சரின் இந்தப் பதில் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளில் இருந்து அரசாங்கம் எந்தளவு தூரத்தில் உள்ளது என்பதையே வெளிப்படுத்தியிருக்கின்றது.

நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் போட்டி போட்டு, எந்த ஆய்வும் இன்றி கடன்களை வழங்கின. அவை பெரும்பாலும் வறுமையிலும், ஆதரவற்ற நிலையிலும் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்காகக் கொண்டிருந்தன. வட்டியைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்ட போது, அவர்களின் வீடுகளுக்கு முன் அவமானப்படுத்தும் வகையில் கடன் வசூலிப்பாளர்கள் செயற்பட்ட சம்பவங்கள் பலமுறை பதிவாகியுள்ளன. சில இடங்களில், கடனை வசூலிக் கக் கையொப்பமிட்ட பொருள்களைப் பறிமுதல் செய்வது முதல், குடும்பத்தினருக்கு எதிராக மிரட்டல்கள் விடுப்பதுவரை நடந்துள்ளது .இந்த அவமானம் தாங்காமல் சில பெண்கள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளனர் என்று மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நுண்நிதிக் கடன்களின் தாக்கம் தொடர்பாக பல ஆய்வுகளும், ஊடகச் செய்திகளும், சமூக அமைப்புகளின் அறிக்கைகளும் கடந்த ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் அறிக்கையில், வடக்கு, கிழக்கில் செயற்படும் பல நுண்நிதி நிறுவனங்கள் 40 சதவீதத்துக்கும் மேற்பட்ட வட்டி விகிதத்தில் கடன்களை வழங்கின என்பதும், நுண்கடன்கள் பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்பதும், அவர்கள் கடன் திருப்பிச் செலுத்தமுடியாமல் சமூக அவமானம், மன அழுத்தம் போன்ற காரணங்களால் கடுமையான உளவியல் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால் பிரதி அமைச்சர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நுண்நிதிக் கடன்களால் பிரச்சினைகளே இல்லை என்று சாரப்படவே கருத்துத் தெரிவித்திருக்கின்றார். வடக்கு, கிழக்கில் நுண்நிதிக் கடன்களால் உயிரிழப்புகள் நடந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை என்று கூறியிருக்கின்றார். இது வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளை ஆராயாது புறக்கணிக்கும் செயற்பாடு என்றே கருதவேண்டியிருக்கின்றது. நீண்டகாலப் போரின் பின்னர் வாழ்க்கையைக் கட்டமைக்கப் போராடும் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தரவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கக்கூடியவை அல்ல. அவை நேரடியாகக் களத்தில் ஆராயப்படவேண்டியவை. நுண்நிதிக் கடன் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தி, மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முயலவேண்டும். அதற்கான இயலுமை அரசாங்கத்துக்கு இல்லாவிட்டால், தவறான கருத்துகளை வெளியிடாது - மக்களின் பிரச்சினைகளை உதாசீனப்படுத்தாது வாய்மூடி இருப்பதே பொருத்தமானது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



மரநடுகை மாதம் (நவம்பர்)

"ஒரு மரத்தை நடுகைசெய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."

–அமிற் றே (இந்திய ஆன்மிகக் குரு)–




## தோட்டத்தொழிலாளர்களுக்கு ஜனவரியில் சம்பள உயர்வு



அமைச்சர் சமந்த வித்யாரத்ன திட்டவட்டம்

**கொழும்பு, நவ.14**

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள 200 ரூபா கொடுப்பனவு சட்டவிரோதம் என்று கூறி அதைத் தடுக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். ஆனாலும் ஜனவரி மாதத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவோம் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புமீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாங்கள் இம்முறை சம்பளத்தை 400 ரூபாவால் அதிகரித்து 1750 ரூபா சம்பளத்தை வழங்குகின்றோம். 25 நாள்கள் வேலை செய்தால் மேலதிகமாக மாதத்துக்கு 10 ஆயிரம் ரூபா கிடைக்கும்.

ஆனால் எதிர்க்கட்சியில் சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தவறான கருத்துகளைப் பரப்ப முயற்சிக்கின்றனர். அரச நிதியை எவ்வாறு கம்பனிகளுக்கு வழங்குவது சட்டவிரோதம் என்று கூறுகின்றனர். அப்பாவித் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கும் நடவடிக்கையை காலால் பிடித்து இழுப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் குழப்பமடையத் தேவையில்லை. நாங்கள் ஜனவரி மாதத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவோம்- என்றார். (எ-இ)

## தெரு நாய்கள் நாட்டில் உயர்வு

கொழும்பு, நவ.14

இலங்கையில் தெரு நாய்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியன் முதல் மூன்று மில்லியன் வரை அபாயகரமாக உயர்ந்துள்ளதாக இலங்கை விலங்குகள் நலச்சங்கம் எச்சரித்துள்ளது.


இந்த அபரிமிதமான அதிகரிப்பால் ஒவ்வொரு வருடமும் சுமார் 250,000 நாய்க்கடிச் சம்பவங்கள் பதிவாவதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த நெருக்கடியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக தேசிய நாய் பதிவுத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்றும், விசர் நாய்க்கடி நோய்க்கு எதிராக மக்களுக்குத் தடுப்பூசி போட ரூ. 600 மில்லியனுக்கும் அதிகமான நிதி தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பஸ் விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு. நவ.14

திருகோணமலை - புத்தளம் பிரதான வீதியின் கிதுல்வுதுவ பகுதியில் இடம்பெற்ற பேருந்து-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என மொரவெவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எஹியா உல்முதீன் அஹமட் எனும் 19 வயது இளைஞனே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச-இ)



## வடக்கு–கிழக்கில் மழை தொடரும்!

கொழும்பு, நவ.14

எதிர்வரும் சில நாள்களுக்கு வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் மழையுடனான நிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ. இற்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

சனிக்கிழமை - ஐப்பசி 29

15.11.2025

சுபநேரம் : 03.07 - 04.37

ராகுகாலம் : 09.07 - 10.37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையிலான ஐக்கியத்துக்கு துயிலுமில்லங்களைக் கையளியுங்கள்!

## ஜனநாயகப் போராளிகள் கட்சி வலியுறுத்து

**கொழும்பு, நவ.14**
**இனங்களுக்கிடையில் நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படவேண்டுமாகவிருந்தால் அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்தும் இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்று ஜனநாயக போராளிகள் கட்சித்தலைவர் சி.வேந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். வடமராட்சி கிழக்கில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்த வருடம் மாவீரர் நினைவேந்தல் சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.தாயகத்தில் ஒரு சில மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.
கணிசமான மாவீரர் துயிலுமில்லங்களில் இன்னும் இராணுவ முகாம்கள் உள்ளன.
இந்த வருடமும் மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு எஞ்சியிருக்கின்ற மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.
மாவீரர் துயிலுமில்லங்களில் இருக்கின்ற இராணுவ முகாம்களை அகற்றுவதற்கான உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார். இது பேச்சளவில் மட்டும் இல்லாமல் செயலளவிலும் இருக்கவேண்டும் என்பது எங்களது கோரிக்கை. நல்லதொரு புரிந்துணர்வு இனங்களுக்கிடையில் ஏற்படவேண்டுமாகவிருந்தால், மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும்- என்றார். (க-இ)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.13
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பிரதேசமட்ட கலை இலக்கிய பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை உதவிப் பிரதேச செயலாளர் க.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வேலணைப் பிரதேச செயலாளர் த.அகிலன் கலந்துகொண்டார்.
போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச-9)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ.14
யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையைக் கருத்திற்கொண்டு வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கம், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கத்துடன் இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் வல்வெட்டித்துறை கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3மணி வரை இடம்பெறவுள்ளது.
இதன்போது குருதிக்கொடை வழங்கியவர்களில் அதிர்ஷ்ட முறையில் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு பெறுமதியான வெள்ளிப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படவுள்ளார். ஏனையவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (ச-41-66)





## இயக்கச்சி—கொடுக்கிளாய் வீதி உலக வங்கி நிதியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.13
பச்சிலைப்பள்ளியினையும் வடமராட்சி கிழக்கினையும் இணைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதான அவசர வெளியேற்றுப் பாதையாக அமைந்துள்ள இயக்கச்சி - கொடுக்கிளாய் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
உலக வங்கியின் 127 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் இந்தப் பணிகளை ஆரம்பித்துள்ளது.
இந்தத் திட்டத்தில் 3 பாலங்கள் மற்றும் 6.7 கிலோமீற்றர் வீதி என்பன புனரமைக்கப்படவுள்ளன. (ச-9)

## மின்சாரசபை ஏற்பாட்டில் யாழில் குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், நவ. 13
இலங்கை மின்சாரசபையின் 56ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை குருதிக்கொடை முகாமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சாரசபையின் வடமாகாண ஊழியர் நலன்புரிச் சங்கம் மற்றும் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் மேற்படிக் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அண்மைக்காலமாக குருதிக்குப் பெரும்தட்டுப்பாடுஏற்பட்டுள்ளது-இவ்வாறான பின்னணியிலேயே இந்த முகாம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-66)




சரவணை மக்கள் ஒன்றியத்தினால் (கனடா) நடத்தப்பட்ட தையல் பயிற்சிநெறியில் பங்குபற்றிய பயிலுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் மாவட்டச் செயலர் அ. சிவபால சுந்தரன், பிரதேச செயலாளர் த.அகிலன், பிரதேசசபை உறுப்பினர், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ச-9)



பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்குமான திறன்விருத்தி தொடர்பான பயிற்சி கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு வடமாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் நாயகம் பி. பிரபாகர் தலைமையில் நடைபெற்றது. வடமாகாணத்தைச் சேர்ந்த பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இதில் பங்கேற்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 08 . 1935

மறைவு 13 . 11 . 2025

## தம்பையா துரைராஜா

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும், இல. 131, இராஜவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா துரைராஜா அவர்கள் நேற்று (13.11.2025) வியாழக்கிழமை காலை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (மாஸ்ரர்) - கனகம்மா தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், ராஜினி (கனடா), ஸ்ரீசுபோஜினி (மட்டக்களப்பு), கோபிவதனன் (சாரங்கன் மல்ரி சென்ரர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைரட்ணம் (கனடா), கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, அம்பிகை, அனந்தன் (கனடா), சாரங்கன், தீபனா ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, அருளையா மற்றும் அன்னலட்சுமி, கணேசன், ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**தகவல்: குடும்பத்தினர்**
**து.தனலட்சுமி (மனைவி)**
**து. கோபிவதனன் (மகன்)**
**077 314 4612**
**+94 76 869 6181 (Whats app)**

**இல. 131, இராஜ வீதி,**
**திருநெல்வேலி.**

(CS/30506) J-1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 23 • 09 • 1970



இறப்பு 15 • 10 • 2025

## அமரர் மயில்வாகனம் சிவநேசன் (ரவி)

தென்மராட்சி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், இடைக்குறிச்சி கிழக்கு வரணியை வசிப்பிடமாகவும் கொண்டு எம்மோடு வாழ்ந்து 15.10.2025 அன்று இறைவனின் பாதங்களை சென்றடைந்த எமது தெய்வம் மயில்வாகனம் சிவநேசன் (ரவி) அவர்களது 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

எமது குடும்ப தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகளை செய்தவர்களுக்கும் எம் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.


அத்துடன் அவரது 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 14.11.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

(CS 46287) E

**இடைக்குறிச்சி கிழக்கு வரணி**

**தகவல் குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



பிறப்பு 29.09.1933

இறப்பு 12.11.2025

## கணேசம்மா இராசதுரை

சந்தை வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணேசம்மா இராசதுரை அவர்கள் கடந்த (12.11.2025) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசதுரை (ஓய்வு நிலை ஆசிரியர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற வெற்றிவேல் கணபதிப்பிள்ளை மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுகுமார் மற்றும் சுகுணலிங்கம், மோகன்குமார், சுகன்யா, சசிகலா, அருட்குமார், இளந்திரை ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி, யோகாம்பிகை, கலாநிதி, காலஞ்சென்ற அருளம்பலம், காலஞ்சென்ற யோகமூர்த்தி மற்றும் சாந்தி, புஸ்பராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரதீஸ், தனுஷா, ரமேஷ், கருணேஸ், நிரோஜ், தர்சி, வைஸ்ணவி, கஜலக்ஷன், கௌசிகன், பகீரதனா, சுஜந்தன், கடோற்கஜன், அஜந்தா, அஜந்தன், யதுஷா, நிதுர்ஷா, லதுஷா, தேனிலன், சிவரூபி, திருக்குமரன், துஸ்யந்தி, காலஞ்சென்ற சாந்தி மற்றும் நதியா, இராகுலன், துஸ்யந்தன், ஜெசிக்கா, யதுசிகா, டினேஸ், லக்ஷனா, பானுரேகா, விஜயன், மனோஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டினுஜா, ரிஷிகுமரன், ஆதித், அபிஷனா, அஷ்விகா, மதுர்ஷ், நிதுர்ஷிகா, குயின்சி, சங்கவி, சங்கீத், அஷ்வின், பவான், செரோமிகா, மிதுர்ஷன், மேகலன் ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கொடிகாமத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனகன் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல் :**
**குடும்பத்தினர்**

CR 46291) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 10 . 1946



மறைவு 27 . 10 . 2024

### அமரர் ஆறுமுகம் இராசநாயகம்

மண்ணைவிட்டு மறைந்து நீங்கள்
ஆண்டொன்று சென்றாலும்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
உங்கள் நினைவுகளுடன் நாள்தோறும்
நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை

(CS/59776) J-1

உங்கள் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்


## நல்லூரில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ.14
நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரை முன்னெடுக்கப்பட வுள்ள நடமாடும் சேவையின் ஒரு கட்டமாக நடமாடும் குருதிக் கொடை முகாமும் நடைபெறவுள்ளது. (ச-66)



## போதைமாத்திரை வியாபாரம் மீசாலையில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ.14
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை பகுதியில் நீண்ட நாள்களாக போதைமாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் .

சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசிய தகவல்களுக்கு அமைய இந்தக் கைது நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து 300 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட் டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-28)



## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 09 . 1944



மறைவு 12 . 11 . 2025

### கந்தசாமி தங்கராசா

சரசாலை வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், மூத்த விநாயகர் வீதி, இரண்டாம் ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தங்கராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (12.11.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மதிஜெனா, மற்றும் பிரசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானலிங்கம் (முன்னாள் பிரதான தபால் அதிபர் - யாழ்ப்பாணம்), வீரசிங்கம் (முன்னாள் அதிபர் - கோப்பாய் மகாவித்தியாலயம்), காலஞ்சென்றவர்களான சற்குணராஜா (Propretar of Amma Appa Arcade Kanagampuliyadi Junction - Chavakacheri Chairman of Quality food suppliers - Kirulapone Colombo - 5), இரத்தினசிகாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் கனகலிங்கம், அன்னலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

30/18 மூத்த விநாயகர் வீதி,
இரண்டாம் ஒழுங்கை,
நல்லூர்.

தகவல்:
மகன் - பிரசாந்தன்
077 225 6308

(CS/59904) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 10 . 1947



மறைவு 09 . 11 . 2025

### சோமசுந்தரம் சண்முகநாதன்

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும், கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான சோமசுந்தரம் சண்முகநாதன் அவர்கள் கடந்த (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தகுமாரி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், கபிஷன் (கனடா) அவர்களின் அன்புத் தந்தையும், ஜிலமை (கனடா) அவர்களின் மாமனாரும், நாச்சேலி, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கேசலட்சுமி, இராஜேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி, நாகேஸ்வரி (இளைப்பாறிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, தியாகராசா, ரட்ணசிங்கம், பாலசுப்பிரமணியம் மற்றும் தவறஞ்சிதம் (கனடா) ஆகியோரதும் , காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, கதிர்காமநாதன் மற்றும் சண்முகநாதன் (கனடா), சிவலோகநாதன் (கனடா), சிவசோதிநாதன் (கனடா), காலஞ்சென்ற ரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை 11.30 am - 01.00 pm North Toronto Crematorium Inc, 2 Stalwart Industrial Drive, Gormley, Ontario LOH IGO என்னும் இடத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/30506) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
## REGISTRATION OF SUPPLIERS & CONTRACTORS - 2026

Applications are invited up to **10th December 2025** from reputed Suppliers / Manufacturers / Contractors who wish to register for supplies / services.

The details of supplies / services and the conditions and Application form related to the registration are available in the University website **http://www.vau.ac.lk.**

Registrar
University of Vavuniya

(CR 46288) A



Airport & Aviation Services
(Sri Lanka)(Private) Limited

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி வீடுகள் / கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் / கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பாலாலி / காங்கேசந்துரை மற்றும் யாழ்ப்பாண போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை / உணவறை படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகளுடன்) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளவாடங்களுடன் இருத்தல் வேண்டும். (தளபாடங்கள். வீட்டுப் பொருட்கள். மின்சாதனங்கள். சமையலறைப் பாத்திரங்கள் போன்றவை)
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்
06. அனைத்து பராமரிப்பு பணிகளையும் வீட்டு உரிமையாளரே செய்ய வேண்டும்.
07. வீட்டிற்கு வெளியே சுத்தம் செய்யும் பணியை வீட்டு உரிமையாளர் செய்ய வேணடியதுடன் குப்பைகளை அகற்றுவதற்கு பொருத்தமான அணுகுமுறையை ஏற்பாடு செய்து தொடர்ந்தும் பேணப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டிடங்கள் முதலாவதாக 06 மாத காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.
கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**01. வீடுகள் / கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட) |
| 2) | வீட்டு /கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | அனைத்துவித வீட்டுத்தளவாடங்கள் (உண்டு / இல்லை) |
| 8) | வீட்டின் பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின் / கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாத வாடகை.
06. எதிர்பார்க்கப்படும் மாதாந்திர வாடகை.
(வீடு/கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)
07. எதிர்பார்க்கப்படும் முற்பணம் (வீடு/கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வீடுகள் / கட்டிடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு **"தவிசாளர். திணைக்கள பெறுகை குழு இலக்கம் 03. வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு. வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்)கம்பனி கட்டுநாயக்க**விற்கு 2025 நவம்பர் மாதம் 27 ஆந் திகதி **பி.ப 2.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 011-2263550 / 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)**
(தனியார்) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,
கட்டுநாயக்க.

(CR 46289) A


# யாழ்ப்பாணத்தில் நீண்ட காலப் பணி; பொலிஸ் அலுவலருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராகப் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமையவே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த 15 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்து வருகின்றார். இடையிடையே வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்றாலும் ஒரு சில மாதங்களில் மீண்டும் அவர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த நிலையில் தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## காணி உடன் விற்பனைக்கு உண்டு

பலாலி வீதி கோண்டாவில் டிப்போக்கு அருகில் உள்ள VIP திருமண மண்டபத்திற்கு பக்கத்தில் உள்ள 7 பரப்பு காணி சிறு துண்டுகளாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- **075 945 3391**

(CS/30714) J-1



## பெயர் மாற்றம்

கோப்பாய் மத்தி காந்தி கிராமத்தில் வசிக்கும் **மாணிக்கம் மலர்** ஆகிய நான் எனது பெயரை **மாணிக்கம் மலர்வதனி** என மாற்றம் செய்கின்றேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிய குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**மாணிக்கம் மலர்வதனி**



## வேலைக்கு ஆள் தேவை (ஆண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு ஆண் வேலையாட்கள் தேவை.

1) அரிவுப்பட்டறையில் வேலை செய்வதற்கு (தேவையான விறகுகள் இயந்திரம் மூலம் வெட்டுவதற்கு (நன்கு அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்) - மாதாந்த சம்பளம் ரூபாய். 70,000/- தொடக்கம் வழங்கப்படும்.
2) களஞ்சிய அறை உதவியாளர் மற்றும் பொருட்கள் களஞ்சிய அறையில் இருந்து தொழிற்சாலைக்குள் பொருட்கள் கொடுப்பதற்கு

மாத சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
மாதம் ஒன்றில் நான்கு நாட்கள் விடுமுறை
வயதெல்லை 25 க்கு மேல் இருக்க வேண்டும்.
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம்.

**0743910843**

(CS/59882) J-1



## காரைநகர் பிரதேசசபை
## தெற்கு உப அலுவலகம்
## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

காரைநகர் பிரதேசசபையின் தெற்கு உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-07. கொட்டைப்புலம் வீதியிலுள்ள 34/4 என்னும் ஆதன இலகத்தைக் கொண்ட ஆதனம் எமது ஆதன பதிவேட்டில் சொந்தக்காரர் உரிமை கோருபவர் கந்தையா சிவபாலன் என காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை கந்தையா சிவபாலன் அவர்கள் எனது காலஞ்சென்ற தாயாருக்கு அவரின் தந்தை தம்பர் கணபதிப்பிள்ளை என்பவர் சீதனமாக கொடுத்தார். குறித்த எனது தாயாராகிய கந்தையா கைம்பெண் பொன்னம்மா அதனை ஆண்டு அனுபவித்த பின் எனக்கு நன்கொடையாக எழுதித்தந்தார். நான் அவ்ஆதனத்தை கடந்த 38 வருடங்களாக ஆண்டு அனுபவித்து வருகின்றேன். நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக குறித்த உறுதி தொலைந்து விட்டது. குறித்த நன்கொடை உறுதியை எழுதித்தந்த நொத்தாரிசு பெயரும் தெரியவில்லை. எனக்கு தற்போது ஒரு உறுதி சாதனம் தேவையாக உள்ளதால் இவ் ஆதனத்தினை எனது சொந்த நன்கொடை ஆதனமாக வெளிப்படுத்தி இவ் உறுதி ஆதனத்தினை நிறைவேற்றுவதாக பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகத்தாவில் 25.04.2015 ஆம் திகதி 5982 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் சாதனம் ஒன்று நிறைவேற்றியிருந்தார். அதன் பின்னர் கந்தையா சிவபாலன் 24.01.2017ஆம் திகதிய 802 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ஜெகநாதன் ஜனாரத் அவர்களுக்கு வழங்கியிருந்தார்.

மார்க்கண்டு நர்த்தனன் பெண் பிரேமலா அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு செ.கிறிஸ்ரபெலினா முகாத்தாவில் நிறைவேற்றப்பட்ட 27.01.2019 ஆம் திகதிய 64 ஆம் இலக்க உறுதி மூலம் ஜெகநாதன் ஜனாரத் அவர்களால் வழங்கப்பட்டு குறித்த ஆதனத்திற்கு சொந்தமும் உரித்தும் உடையவராகின்றார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை "சாந்தை" ஆட்சிப்படி நில.ப.6 ஆறும் இதில் கிழக்குப் பக்கமாக நில.பர.3 பனைகளும் இதன் எல்லைகள்.

வடக்கு - 4 அடி பாதை
கிழக்கு - வீரகத்தி கதிரவேலுவின் ஆதனம்
தெற்கு - சின்னக்குட்டி இளந்தரசிங்கத்தின் ஆதனம்
மேற்கு - தம்பையா சிவரூபனின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தினை மார்கண்டு நர்த்தனன் பெண் பிரேமலா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மார்க்கண்டு நர்த்தனன் பெண் பிரேமலா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதனால் வரக்கூடிய் எப்பொறுப்பிற்கும் காரைநகர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**காரைநகர்.**

(CS 59905) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பப்படும் நாட்டையே உருவாக்குகின்றது அரசு

## குற்றஞ்சாட்டுகின்றார் சஜித்



கொழும்பு, நவ.14
"வளமான நாடு அழகான வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு மக்கள் ஆணைகளைப் பெற்றுக்கொண்ட அரசாங்கம், துன்பப்படும் நாடு, உதவியற்ற வாழ்க்கையையே தற்போது ஏற்படுத்திவருகின்றது" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட் டியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
திறைசேரி வழிந்தோடுவதாக தெரிவிக்கிறார்கள். அரசாங்கம் மக்களின் பின்னால் விரட்டிச்சென்று ஒவ்வொரு விடயத்துக்கும் வரி அறவிடுகின்றது. அவ்வாறு திறைசேரியை நிரப்புவதாக இருந்தால் பாலர் பாடசாலை மாணவன்கூட அதைச் செய்யலாம். சர்வதேச நாணயநிதியத்தின் இலக்கைவிட அதிக வரியை அரசாங்கம் அறவிட்டிருக்கிறது. இவ்வாறு அறவிட்ட 479 பில்லியன் ரூபாவை மக்களின் நன்மைக்காக முதலீடு செய்யவேண்டும். அதற்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது.
அரசாங்கத்தின் நடவடிக்கையால் மக்கள் இன்று விரக்தியடைந்திருக்கின்றனர். அதனால் மாகாணசபைத் தேர்தலை நடத்தி நாட்டு மக்களுக்கு அரசு தொடர்பாகவும் ஏனைய அரசியற்கட்சிகள் தொடர்பாகவும் நிலைப்பாட்டைத் தெரிவிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இடமளிக்கவேண்டும்-என்றார். (எ-இ)

# கைதடி சித்த வைத்தியசாலையை தரமுயர்த்த நிதியொதுக்கவில்லை

## சித்த வைத்தியர்கள் சங்கம் அதிருப்தி

**யாழ்ப்பாணம், நவ.14**
**வரவு - செலவுத் திட்டத்தில் கைதடி சித்த போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று அரச வேலை எதிர்பார்க்கும் சித்த வைத்தியர்கள் சங்கம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.**



இதுதொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சித்த வைத்திய சேவையின் மையமாக விளங்கும் கைதடி சித்த போதனா வைத்தியசாலை கல்வி, ஆராய்ச்சி மற்றும் நோயாளி, பராமரிப்பு ஆகிய துறைகளில் முக்கியமான பங்காற்றிவருகிறது.
கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி சுகாதார அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் இதனைத் தேசிய சித்த வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்திருந்தபோதிலும் புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.
பொரளை ஆயுள்வேத வைத்தியசாலை தற்போது ஐந்துமாடிக் கட்டடத்துடன் நவீன வசதிகளுடன் இயங்குகிறது. ஆனால் வடக்கு-கிழக்கு மக்களின் நம்பிக்கையான கைதடி சித்த வைத்தியசாலை இன்னமும் குறைந்த வசதிகளுடனேயே செயற்படுகிறது.
வடக்கு மாகாண மக்களின் நலனுக்காக ஆறு மாடிகள் கொண்ட தேசிய தரம் வாய்ந்த சித்த வைத்தியசாலை கைதடியில் அமைக்கப்படுவது காலத்துக்கேற்ற அவசியம். இது கல்வி, ஆய்வு மற்றும் நோயாளி சேவையில் புதிய முன்னேற்றத்தை ஏற்படுத்தும். இந்தத் துறைகள் நாட்டின் பாரம்பரிய அடையாளமாக இருப்பதால் அவற்றை மேம்படுத்த உறுதியான கொள்கை தேவை - என்றுள்ளது. (ச-66)

# பருத்தித்துறை மரக்கறிச் சந்தை பழைய இடத்துக்குத் திடீர் மாற்றம்

## பொறுமையிழந்த வியாபாரிகள் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 14
பருத்தித்துறை மரக்கறிச் சந்தை வியாபாரிகள் நீண்ட இழுபறிக்குப் பின்னர் மீண்டும் நவீன சந்தையின் மேல் தளத்துக்கு தமது வியாபார நடவடிக்கைகளை மாற்றியுள்ளனர்.
பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைந்துள்ள நவீனசந்தை கட்டடத் தொகுதியின் மேல்தளத்தில் இயங்கி வந்த மரக்கறி சந்தையை முதலாம் குறுக்குத்தெருவில் அமைக்கப்பட்ட புதிய இடத்துக்கு மாற்றுவதற்கு நகர சபை செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.
புதிய மரக்கறி சந்தை அமைவிடம் தொடர்பில் ஆரம்பத்தில் இருந்து மரக்கறி வியாபாரிகளிடம் கடும் அதிருப்தி நிலவி வருகிறது. நவீன சந்தைக் கட்டடத்தொகுதியின் கீழ் தளத்தில் பொருத்தமான வகையில் சந்தையை அமைத்து தருமாறு நீண்டகாலமாக மரக்கறி வியாபாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.
வெள்ளநீர் தேங்கும் வகையில் புதிய மரக்கறிச் சந்தை அமைக்கப்பட்டுள்ளதால் மழைக்காலத்தில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறான நிலையில் பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கு மாற்றுவதற்கு சில நாள்களில் நடவடிக்கை எடுப்பதாக நகரபிதா வின் சென் டீ போல் டக்ளஸ் போல் அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும், அதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.
இதையடுத்து, மரக்கறி வியாபாரிகள் தன்னிச்சையாகச் செயற்பட்டு நேற்று அதிகாலைமுதல் மரக்கறிகளுடன் நவீன சந்தை கட்டட்டத்தின் மேல் தளத்தில் வியாபர நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.
இதையடுத்து மரக்கறி வியாபாரிகள், வர்த்தகர்களுடன் பருத்தித்துறை நகர சபையினர் நேற்று மாலை கலந்துரையாடல் நடத்தினார்கள். இதன்போது தங்களுடைய முடிவில் மாற்றமில்லை நவீனசந்தை கட்டடத்தொகுதியில் தான் இனிமேல் வியாபார நடவடிக்கையினை செய்வோம் என மரக்கறி வியாபாரிகள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர். இதனால், இன்று அதிகாலை நவீன சந்தை கட்டடத்தை திறக்காது பூட்டிவைத்து பொலிஸார் மூலம் வியாபாரி களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படலாம் என வியாபாரிகள் மட்டத்தில் பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# சோம்பேறிகளில் இலங்கை மூன்றாமிடம்

கொழும்பு, நவ.14
உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி போதுமான உடல் செயற்பாடு இல்லாததால் தெற்காசியாவில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 37.2 வீதம் பேர் பரிந்துரைக்கப்பட்ட உடல் செயற்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டனர் என்றும் ஆண்களில் 28.7 வீதம் பேருடன் ஒப்பிடும்போது 44.8 வீதம் பெண்கள் குறைவான சுறுசுறுப்புடன் இருக்கின்றனர் என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (ச-இ)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மீசாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர் இளையதம்பி இராசையா**
அன்புத் தெய்வமே ஆருயிர் அப்பாவே
அன்போடு எங்களை அனுதினமும்
அரவணைத்தீர்!
அல்லும் பகலும் அயராமல் எமைக் காத்தாய்
உலகுக்கு நீ உத்தமனாய் வாழ்ந்து நின்றாய்
எம் அறுவரின் உயர்வுக்காய் தினம் தினம்
சிந்தித்தாய்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்
என அனைவரின் நெஞ்சங்களிலும் நிலைத்து நின்றாய்.
நீங்காது உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சோடு.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்...

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான பரிந்துரைகள் மற்றும் திட்டங்களை முன்வைப்பதற்காக, விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவே தனது பரிந்துரை அறிக்கையை நீதி அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பில் அந்தக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள், அமைச்சரவையின் கவனத்துக்கும், ஜனாதிபதியின் கவனத்துக்கும் விரைவில் கொண்டு செல்லப்படவுள்ளன. அதன் பின்னர் அவற்றின் மீதான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

கடந்த செப்ரெம்பர் மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் முன்னர் அறிவித்திருந்தார். எனினும், பரிந்துரை அறிக்கை கிடைக்காமையாலேயே அந்தப் பணிகள் தாமதமாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## வங்காள...

துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை எதிர்வுகூறியபடி வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது இலங்கைக்குத் தென்கிழக்காக இலங்கைக்கு அருகில் காணப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடரும் வாய்ப்புள்ளது.

மீளவும் ஒரு காற்றுச் சுழற்சி எதிர்வரும் 17ஆம் திகதி வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் உருவாகும். அது கிழக்கு மாகாணத்துக்கு அருகாக நிலை கொள்ளும். இதனால், மீளவும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதன்பின் எதிர்வரும் 21ஆம் திகதி இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே மாநிலத்துக்கு அருகாக காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. இது தீவிரம் பெற்று ஒரு புயலாக மாறும் வாய்ப்புள்ளது. இந்த புயலால் எதிர்வரும் 22ஆம் திகதி வரை இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் மிக கன மழையைப் பெறும் என்பதோடு கடற்பகுதிகள் மற்றும் கரையோரப் பகுதிகளில் பலத்த வேகத்தில் காற்று வீசக்கூடும். எனினும், இதனை எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின்னரே உறுதிப்படுத்த முடியும். இந்தப் புயலுக்கு சென்வார் எனப் பெயரிடப்படும். இதனால், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (அ-ம-66)

## ஹெரோய்னுடன்...

பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து 3 கிராம் 700 மில்லிகிராம் மற்றும் 3 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

கைது நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் இருவரும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முனைந்தனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 21 மற்றும் 23 வயதுடையவர்கள். அவர்களில் ஒருவர் 25 இற்கும் மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைக்குப் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-28)

## தேர்தல்...

தார். 34 வருடங்களாக அரச சேவையில் பணியாற்றிய அவர், நேற்றுடன் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். (அ-ம-இ)

## நிலையான...

வில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒப்பிட்டுப் பேசுவதை ஒரு சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். எனினும் ஏனைய அரசாங்கத்தை போல எமது அரசாங்கம் இல்லை. அன்று ஆட்சியைக் கைப்பற்றப் போராடிய நாங்கள், இன்று நாட்டை வெற்றிபெறச் செய்வதற்குப் போராடுகின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுடன் ஒன்றித்த அரசாங்கமாகும். மக்களால் வழங்கப்பட்ட பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, அவர்களை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் ஆட்சி செய்யக்கூடாது என்ற பொறுப்புணர்வுடன் செயற்படுகிறோம்.

உயர்ந்த பதவியிலிருந்து தன்னிச்சையான முடிவுகளை நாம் எடுப்பதில்லை. அரசாங்கத்தின் உண்மையான பலம் பொதுமக்களே. இறுதி மூச்சுவரை நாட்டின் நிலையான மாற்றத்துக்காக சளைக்காமல் போராடுவோம். தேசிய மக்கள் சக்தி, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது சாத்தியமில்லை என கூறினார்கள். பின்னர் ஆட்சிக்கு வந்தாலும், ஆட்சியை கொண்டு நடத்த தரமான நபர்கள் இல்லை என்றனர். எனினும் தேசிய மக்கள் சக்தி மக்களின் ஆதரவுடன் ஒன்றிணைந்து வெற்றிகரமாகச் செயற்படுகின்றது.

கடந்த காலங்களில் அரசியல் தலைமைகளிடம் வாக்குமூலம் பெற விசாரணை அதிகாரிகள் அவர்களுடைய வீடுகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. எனினும் தற்போது சக மனிதர்கள் செல்லும் அதே வாசல் வழியாக அரசியல் தலைமைகளும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று வருகின்றனர்.

எங்களுடைய அரசாங்கத்தை வீழ்த்துவதாக கதை பேசி வருகின்றனர். அது நடக்காது. இந்த அரசாங்கம் மேலும் உறுதியாக கட்டியெழுப்பப்படும். கட்சி பேதங்களின்றி அரசாங்கம் தனது பணியை நிறைவேற்றும் - என்றார். (அ-ம)

## கிணற்றுக்குள்...

மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த தோட்டக் கிணற்றுக்குள் நீராடுவதற்காக ஐந்து பேர் சென்றுள்ளனர். அனைவரும் கயிறுகட்டி நீராடிவிட்டு கிணற்றிலிருந்து வெளியேறிய பின்னர், குறித்த இளைஞர் மட்டும் இன்னும் சிறிதுநேரம் நீராடிவிட்டு வருவதாகத் தெரிவித்து கிணற்றுக்குள் இருந்துள்ளார்.

நீண்ட நேரமாகியும் குறித்த இளைஞர் வராததால் ஏனையவர்கள் மீண்டும் அங்கு சென்று பார்த்தபோது கயிறு அறுந்திருந்ததுடன், அந்தச் இளைஞரைக் காணவில்லை. இதையடுத்தே, ஏனையவர்களின் உதவியுடன் தேடுதல் நடத்தியபோது அந்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரண விசாரணையை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டார். சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ-ம-26)

## போதை...

யட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20, 21 மற்றும் 22 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைக்குப் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## முள்ளிவாய்க்கால்...

மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக திருமாவளவன் யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை வருகை தந்தார். இதைத் தொடர்ந்தே, அவர் முல்லைத்தீவுக்கும் சென்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளார். (அ-ம-26-20-66)

## துயிலும்...

நடைபெற்ற பட்ஜெட் விவாதத்தின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி.யின் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கார்த்திகை வீரர்கள் தினம் இன்று நினைவு கூறப்படுகின்றது. அவர்களுக்கு நானும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

கார்த்திகை மாதத்தில் வடக்கு, கிழக்கில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் 32 இற்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் உள்ளன. எங்களது இனத்துக்காக, விடுதலைக்காக போராடிய மாவீரர்கள் மற்றும் பொதுமக்கள் விதைக்கப்பட்டுள்ள அந்த புனிதமான இடங்களை நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

மாவீரர் துயிலும் இல்லங்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்காக, அவற்றைத் தமிழ் மக்களிடம் பொறுப்புக் கொடுக்க வேண்டும். இதன் முதற்கட்டமாக மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும். மாவீரர் துயிலும் இல்லங்களுக்கான நிதியை அரசாங்கம் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தச் செலவை நாங்கள் பார்த்துக் கொள்வோம் - என்றார்.

இதேவேளை, மாவீரர் துயிலும் இல்லங்களில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் விரைவில் வெளியேற்றப்படுவர் என்று அமைச்சர் சந்திரசேகர் அண்மையில் தெரிவித்திருந்தார். இராணுவத்தை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுர கூறியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## யாழ்.நகரில்...

முன்பாக இன்று காலை 6.30 மணியளவில் இந்த நடைபயணம் ஆரம்பமாகவுள்ளது. இந்த நடைபவனி கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொகுசு பஸ் சேவையில் அரசாங்கத்தால் ஊழல்!



## முல்லைத்தீவில் போர்க்கொடி

முல்லைத்தீவு, நவ.14

ஊழல்களை ஒழிப்போம் என அறிவித்து செயற்பட்டுவரும் இந்த அரசால், முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணத்தைத் தொடங்கியுள்ள சொகுசு பேருந்துச் சேவையில் ஊழல்கள் நிறைந்துள்ளன என முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இந்தச் சேவையின் முதற்பயணம் ஆரம்பிக்கப்பட்டநிலையில் அதனை வழிமறித்து இந்த எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு சொகுசு பேருந்துச் சேவையின் அனுமதிப்பத்திரத்தை உள்ளூர்வாசிகளுக்கு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் வெளிமாவட்டத்தவருக்கே வழங்கப்பட்டுள்ளது. இதில் ஊழல் நிறைந்துள்ளது. இதற்கான வழித்தட அனுமதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்படவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ச-19)

## கிளிநொச்சியில் திருட்டு சந்தேகநபர்கள் சிக்கினர்!

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் நகையும் பணமும் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கிளிநொச்சி விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாந்தபுரம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் உரிமையாளர்கள் உறக்கத்தில் இருந்தவேளை 3 பவுண் தங்க நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத்தடுப்புப்பிரிவினர் சாந்தபுரம் பகுதியில் வைத்து இரண்டு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 3 பவுண் நகையையும் ஐம்பதாயிரம் ரூபா பணத்தையும் மீட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுடன் இருந்த மற்றொருவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து 3கிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)

## சைவமாநாடும் பட்டமளிப்பும்

யாழ்ப்பாணம், நவ.14

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 62ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவசித்தாந்த பண்டிதர்.கார்த்திகேசு கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடச் சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர். சிவஸ்ரீ.ம.பாலகைலாசநாதக் குருக்கள் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், சித்த வைத்தியர் நா.கணேசலிங்கநாதன், சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் ஆலயத்தின் தர்மகர்த்தா க.மணிவண்ணன் ஐயா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், பௌராணிகர்களான க.இராசையா, வே.இரகுநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)

## இலவச நீரிழிவுப் பரிசோதனை யாழ்ப்பாணத்தில் சனியன்று!

யாழ்ப்பாணம், நவ.14

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகம் நடத்தும் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் கச்சேரிக்கு அருமையிலுள்ள வை.எம்.சி. ஏ. மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9மணி முதல் மதியம் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடற்திணிவுச் சுட்டி, மருத்துவ ஆலோசனைகள் என்பன இடம்பெறவுள்ளன. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். நீரிழிவுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)


## சண்டிலிப்பாயில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ.14

அமரர் சுரேந்திரன் சதீஸ்கண்ணாவின் ஞாபகார்த்தமாக சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சனசமூக நிலையம் நடாத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

எம்தேச உறவுகளுக்காக உயிர் காக்கும் இந்த உன்னதக் குருதிக்கொடை முகாமில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச-41-66)


## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 16 • 11 • 1947

மறைவு 15 • 10 • 2025

கடந்த 15.10.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**சுப்பிரமணியம் தங்கராஜா**

(உரிமையாளர் - ராஜ் ஜுவல்லர்ஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை சனிக்கிழமை (15.11.2025) நண்பகல் 12.00 மணியளவில் இல 37 சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்திலும் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் பிரிவினால் துயருற்று இக்கட்டான சூழ்நிலையில் இருந்தமையினால் தங்களுக்கு இல்லங்களில் வந்து அழைக்க முடியாமையையிட்டு வருந்துவதோடு எமது இவ் அழைப்பை தங்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

64/7 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 900 6957
077 663 6384

(CS 59881) E


# நுகேகொட போராட்டம் ஆட்சிக் கவிழ்ப்புக்குரியதல்ல

## சரத் வீரசேகர விளக்கம்

கொழும்பு, நவ.14

எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடவில் நடைபெறவுள்ள பேரணி ஆட்சிக் கவிழ்ப்புக்குரிய போராட்டம் அல்ல என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- 21 ஆம் திகதி பேரணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். இது ஆட்சிக் கவிழ்ப்புக்குரிய போராட்டம் அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். ஏனெனில் அடுத்த தேர்தலின்போது நாட்டு மக்கள் நிச்சயம் இந்த ஆட்சியைக் கவிழ்ப்பார்கள்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதே பேரணியின் பிரதான நோக்கம். போதை ஒழிப்பு நடவடிக்கை வரவேற்கத்தக்கது. எனினும், போதை ஒழிப்பு என்ற போர்வையில் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதியை மறந்து செயற்படுவது ஏற்புடையது அல்ல-என்றார். (எ-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.